**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, TIRUMANGALAM**

**Case No: CC.252/2024**

**Prosecution Witnesses : 2**

| | | | |
|---|---|---|---|
| Name | : சுப்பையா | Caste | : |
| Father 's Name / Husband Name | : **சண்முகவேல்** | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

(எதிரி ஆஜர். எதிரி தரப்பில் வழக்கறிஞர் ஆஜர். அரசு உதவி வழக்கறிஞர் ஆஜர்)

**(11.06.2026)**

**முதல் விசாரணை**

சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் சொல்ல அனுமதிக்கப்படுகிறார்.

நான் தற்போது மதுரை மாவட்டம் சிந்துபட்டி காவல் நிலையத்தில் சிறப்பு சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து வருகின்றேன். இதற்கு முன்பு மேற்படி காவல் நிலையத்தில் பணிபுரிந்த சார்பு ஆய்வாளர் திரு.பால்ராஜ் என்பவரின் கையெழுத்து மற்றும் கையொப்பம் எனக்கு நன்கு பரிச்சயம். அவர்கள் மாற்று பணியில் சென்றுவிட்டதால் வழக்கு கோப்பை பார்வையிட்டு ஆவணங்களின் அடிப்படையில் நான் சாட்சியம் அளிக்கின்றேன். கடந்த 22.04.024ம் தேதி சார்பு ஆய்வாளர் அவர்கள் காவல் நிலையத்தில் நிலைய பொறுப்பில் பணியிலிருக்கும் போது திருமங்கலம் அரசு மருத்துவமனையில் இருந்து கிடைத்த தகவலின் பேரில் அங்கு சென்று அங்கு உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்த ஒய்யாண்டி மகன் காட்டுராஜா என்பவரை விசாரணை செய்து அவர் அளித்த புகார் மனுவைப் பெற்று 18.30 மணிக்கு நிலையம் வந்து அதன் தன்மைக்கேற்ப நிலைய குற்ற எண். 80/2024 பிரிவுகள் 294(பி), 324, 506(2) இதச வின் படி வழக்கு பதிவு செய்து புகார் மனுவையும் முதல் தகவல் அறிக்கையையும் நீதித்துறை நடுவர்

நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்துள்ளார். மற்ற நகல்களை மேல் அதிகாரிகளுக்கு அனுப்பி வைத்துள்ளார். **முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. பின்னர் இவ்வழக்கை தனது புலன் விசாரணைக்கு எடுத்துக் கொண்டு அன்றைய தினமே இரவு 20.00 மணிக்கு சம்பவம் இடம் சென்று சாட்சிகள் சங்கிலி மற்றும் பெரியகருப்பன் ஆகியோர்களின் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வைஇட்டு பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார். **மேற்படி பார்வை மகசர் நகல் அ.சா.ஆ.3, மாதிரி வரைபடம் நகல் அ.சா.ஆ.4 ஆகும்.** மேலும் பட்டியல் சாட்சிகள் 1 முதல் 6 வரை உள்ளவர்களை தனித்தனியே விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். பின்னர் எதிரியை தேடி வந்த நிலையில் எதிரியை 04.05.2024ம் தேதி 18.00 மணிக்கு காவல் நியைலம் முன்பு வைத்து எதிரியை கைது செய்து தக்க பிணையில் விடுவித்துள்ளார். அதன் பின்பு அ.சா.1க்கு சிகிச்சையளித்த திருமங்கலம் அரசு மருத்துவமனை மருத்துவர் திருமதி.அமலா என்பவரை விசாரித்து காயச்சான்று பெற்று வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச்சான்று நகல் **அ.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பின்னர் சார்பு ஆய்வாளர் தனது விசாரணையை முடித்து எதிரிகள் மீது சட்டப்பிரிவுகள் 294(பி), 324, 506(2) இதச வின் படி குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**எதிரி தரப்பில் கு.வி:**

வழக்கு ஆவணங்களை பார்வையிட்டு சாட்சியம் அளித்துள்ளதால் எனக்கு விசாரணை பற்றி தெரியாது என்றும் பொய்யான தகவல்களை தயார் செய்து எதிரியின் மீது பொய்யான குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளனர் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை** இல்லை.